# True Disciple

# உண்மை சீஷன்

April - June 2022 ஏப்ரல் - ஜூன்

A Quarterly News Bulletin of City Revival AG Church

நம்முடைய கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு

## ஜெயங்கொடுக்கிற

தேவனுக்கு ஸ்தோத்திரம்

1 கொரிந்தியர் 15:57



Thanks be to God
who gives us the victory
through our Lord Jesus Christ.

1 Corinthians 15:57

# வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு

பாஸ்டர். **ஜெரி டேனியல்**

**கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 2 கொரி. 2:14; 1 கொரி. 15:57.**

நம்முடைய தேவன் வெற்றி வாழ்வை நமக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். நாம் உலகில் பிறந்ததோ, கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்ததோ தோல்விக்காக அல்ல. நாம் ஒவ்வொருவரும் சமாதானமுள்ள (ஏசா.30:15), பரிபூரணமுள்ள (யோவான் 10:10), மகிழ்ச்சியுள்ள (யோவான் 15:11), விடுதலையுள்ள (ரோமர் 6:7) மற்றும் வெற்றியுள்ள (2 கொரி 2:14) வாழ்க்கை வாழவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

இப்படிப்பட்ட வெற்றியுள்ள வாழ்க்கையை கிறிஸ்து இயேசுவின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். தேவன் தரும் வெற்றியுள்ள வாழ்க்கை பாவத்தின் மீதும், சுயத்தின் மீதும், சாத்தானின் மீதும் ஜெயம் பெற்று வாழும் வாழ்க்கையாகும். இந்த வெற்றியை தேவன் நமக்கு பரிசாக கொடுத்திருந்தாலும், நாம் வாழ்க்கைப் பயணத்தில் தொடர்ந்து உலகம், மாமிசம், பிசாசு ஆகிய எதிரிகளை வென்று வெற்றியோடு வாழ்வதற்கு கீழ்கண்ட காரியங்களை செய்ய வேண்டுமென்று வேதம் போதிக்கிறது.

## 1. ஜெபத்தின் மூலம் வெற்றி (SUPPLICATION)

ஜெபம், ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு வல்லமையான ஆயுதமாயிருக்கிறது. நாம் ஜெபிக்கும்போது நாம் கர்த்தரைச் சார்ந்து இருக்கிறோம் என்பதையும், அவரையல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும் வெளிப்படுத்துகிறோம். தன் பெலத்தினால் ஒருவனும் மேற்கொள்வது இல்லை என்று வேதம் கூறுகிறது (1 சாமு. 2:9). ஜெயம் கர்த்தரால் வருகிறது (நீதி. 21:31, 1 நாளா. 29:11, சங்.75:6). தேவனை ஊக்கமாகத்தேடி அவருடைய கரத்தில் நம்முடைய காரியங்களை முழுவதும் அர்ப்பணிக்கும்போது, அவர் நமக்காக அற்புதங்களைச் செய்து, வெற்றியைத் தருகிறார். ராஜாவாகிய ஆசா மற்றும் யோசபாத் ஆகிய இருவரும், இதை நன்கு அறிந்தவர்களாய் தேவனை ஜெபத்தில் தேடி யுத்தத்தில் பெரிய வெற்றிகளைப் பெற்றார்கள்.

அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தை வாசிக்கும்போது, அதின் ஒவ்வொரு பக்கத்திலும் வெற்றியின் முழக்கத்தைக் கேட்க முடியும். ஆதி கிறிஸ்தவர்கள் எப்படி ஜெபிக்கவேண்டுமென்று அறிந்தவர்களாய் தங்கள் வாழ்க்கையை ஜெபத்திற்கு முற்றிலும் அர்ப்பணித்திருந்தனர். தேவன் அவர்களுக்கு தொடர்ந்து வெற்றிகளைத் தந்தார். இன்று அநேகர் உலகம், மாமிசம், பிசாசு ஆகியவைகளுக்கு எதிரான யுத்தத்தில் ஜெயிக்கமுடியாமல் தோல்வியடைகின்றனர். அந்த தோல்விக்கான பிரதான மற்றும் அடிப்படையான காரணம் ஜெபமின்மையும், ஜெபக்குறைவுமாகும். ஜெபமே ஜெயத்தைக் கொண்டு வரும். சரீரத்தில் பெலவீனமானவனான கிறிஸ்தவனும் முழங்கால் படியிடும்போது பிசாசு நடுங்குகிறான். நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று இயேசு கூறினார் (மாற்கு 14:38). எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியிலே ஜெபம் பண்ணி... விழித்துக் கொண்டிருங்கள் என்று வேதம் அறிவுறுத்துகிறது (எபே.6:18).

## 2. வேதவசனத்தின் மூலம் வெற்றி (SCRIPTURES)

அப்போஸ்தலனாகிய யோவான், “வாலிபரே! நீங்கள் பலவான்களாய் இருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள்

பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதுகிறேன்” என்று கூறுகிறார். பாவத்தையும், சாத்தானையும் ஜெயிக்க வசனம் என்னும் வல்லமையான ஆயுதத்தை தேவன் நம்முடைய கரங்களில் கொடுத்திருக்கிறார். தேவனுடைய வார்த்தை சாத்தானைத் தாக்கும் பட்டயமாக இருக்கிறது (எபே. 6:17). நாம் வேத வார்த்தையைப் படித்து, தியானித்து, அவைகளால் நம்முடைய இருதயத்தை நிரப்ப வேண்டும். வேதம் நம்முடைய கரங்களிலோ, தலையின் கீழின் இருப்பதினாலோ சாத்தான் பயப்படமாட்டான். தேவனுடைய வார்த்தை நம்முடைய இருதயத்தில் இருக்க வேண்டும் (உபா. 6:6, 11:18, சங்.37:31, 40:8). இயேசு சாத்தானை வசனத்தின் மூலம் ஜெயித்தார். “எழுதியிருக்கிறதே” என்று வேத வசனத்தைக் கூறி பிசாசின் சோதனைகளை மேற்கொண்டார் (மத்.4:4, 7, 10). நம்முடைய இருதயத்தில் வசனம் இருக்குமென்றால் நாம் பாவத்தை மேற்கொள்ள முடியும் (சங். 119:11). வெற்றி வாழ்வு வாழ்வதற்கு நியாயப்பிரமான புஸ்தகத்தை தியானித்து அதைக் கைக்கொள்ள வேண்டுமென்று கர்த்தர் யோசுவாவுக்கு அறிவுரை கூறினார் (யோசுவா 1:8). நீங்களும் வேதவசனத்தை வாசித்து, மனனம் செய்து அதற்கு கீழ்படிந்தும் வாழ்ந்தால், கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்து வெற்றியோடு வாழ முடியும்.

## 3. துதியின் மூலம் வெற்றி (SINGING PRAISES)

துதி நம்முடைய வாழ்வில் வெற்றியைக் கொண்டுவருகிறது. தேவன் துதியின் மத்தியில் வாசம் பண்ணுகிறார் (சங். 22:3). துதிக்கிறவர்கள் அற்புதத்தைக் காணாமல் இருக்க முடியாது. கர்த்தரை எக்காலத்திலும் துதிக்கிறவர்கள் தங்கள் வாழ்க்கையில் அசாதாரண வெற்றிகளைக் காண்பார்கள். இந்த ரகசியத்தை அறிந்த யோசபாத் ராஜா, தனக்கு விரோதமாக வந்த மூன்று பலத்த சேனைகளைத் துதியின் மூலம் மேற்கொண்டார். கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளதென்று கர்த்தரைப் பாட, பாடகரை நிறுத்தினான். அவர்கள் பாடி துதி செய்ய தொடங்கினபோது எதிரிகளை ஒருவருக்கு விரோதமாக ஒருவரை கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள் (2 நாளா. 20:21, 22). நாம் துதிக்கும்போது இப்படியாக கர்த்தர் நமக்காக யுத்தம் பண்ணுகிறார். சத்துருவின் திட்டங்களையும், செயல்களையும், முறியடித்து வெற்றிபெறச் செய்கிறார். நாம் கர்த்தரைத் துதிக்கும்போது சோர்வுகளையும், துயரங்களையும் மேற்கொள்ள முடியும் என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 61.3).

## 4. பரிசுத்த ஆவியின் மூலம் வெற்றி (SPIRIT OF GOD)

வெள்ளம்போல் சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாகக் கொடியேற்றுவார் என்று வேதம் கூறுகிறது (ஏசா. 59:19). ஆவிக்குரிய யுத்தங்களை மாம்சீக போராயுதங்களைக் கொண்டு வெற்றிபெற முடியாது (2 கொரி. 10:4). பரிசுத்த ஆவியின் பெலனைச் சார்ந்து வாழும் போது மட்டுமே சத்துருவின் தந்திரங்களை முறியடிக்க முடியும். தேவன் நமக்கு பரிசுத்த ஆவியின் மூலம் உன்னதத்தின் பெலனைத் தருகிறார் (லூக். 24:49) மற்றும் அனைத்து விதமான கட்டுகளிலிருந்தும் விடுதலையைத் தருகிறார் (லூக். 4:18; 2 கொரி. 3:17). மாம்சத்தின் கிரியைகளான விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் ஆகியவைகளை மேற்கொண்டு ஆவியின் கனிகளான அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய இவைகளை வெளிப்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார் (கலா. 5:18-25). ஆவியானவர் மூலம் நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக மாறுகிறோம் (ரோமர் 8:37).

## 5. விசுவாசத்தினால் வெற்றி (STEADFAST FAITH)

“தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்” என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 5:4). கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய விசுவாசத்தின் மூலம் தேவன் நமக்கு வெற்றியைத் தருகிறார். நம்முடைய விசுவாசம் கர்த்தரிலும், அவருடைய வார்த்தையிலும் இருக்கும்போது வாழ்க்கையில் எந்த தடைகளையும், சவால்களையும் மேற்கொள்ள முடியும். சிறுவனாகிய தாவீது பெரிய தேவன் மேல் அளவற்ற விசுவாசம் வைத்திருந்தபடியால் கோலியாத்தை எளிதாக ஜெயித்தான் (1 சாமு. 17:45-47).

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் மேல் நாம் விசுவாசம் வைப்போமானால் அற்புதங்களையும், வெற்றிகளையும் பெற்றுக் கொண்டேயிருக்க முடியும். நமக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரம் என்று வேதம் கூறுகிறது (ஏசா. 54:17). வெற்றி நமது சுதந்தரமும், உரிமையுமாகும். நாம் கர்த்தரை சேவிக்கும்போது வெற்றியை தேவன் நமக்கு சுதந்தரமாகவும், பிறப்புரிமையாகவும் கொடுக்கிறார். நாம் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சனை மற்றும் போராட்டத்திலும் இந்த வெற்றியை நாம் உரிமையாக்கிக்கொள்ள வேண்டும். பொல்லாங்கன் எய்யும், அக்கினி அஸ்திரங்களையும் அவித்து போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள் என்று வேதம் கூறுகிறது (எபே. 6:16).

## 6. பரிசுத்தவான்களின் ஐக்கியத்தின் மூலம் வெற்றி (SAINTS' FELLOWSHIP)

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு பரிசுத்தவான்களின் ஐக்கியம் இன்றியமையாதது. தேவப்பிள்ளைகளின் ஐக்கியத்தை விட்டுப் பிரிந்து வாழ்வது மிகவும் ஆபத்தானது. இன்று அநேகர், “நானும், தேவனும் மட்டும்” என்ற கொள்கையுடன் வாழுகிறார்கள். அவர்கள் கெர்ச்சிக்கிற சிங்கமாகிய பிசாசினால் எளிதாக விழுங்கப்படுகிறார்கள். மந்தையை விட்டுப் பிரிந்து தனித்துப் போகும் ஆடுகள், ஓநாயினால் எளிதாகப் பட்சிக்கப்படுகின்றன. தாய் கோழியின் பாதுகாப்பில் இருக்கும் மற்ற கோழி குஞ்சுகளை விட்டு தனித்துப் போகும் கோழிக்குஞ்சை கழுகு எளிதாகப் பறித்துச் செல்கிறது. இந்த உதாரணங்கள் ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை நமக்குக் காட்டுகின்றன.

ஆம், தேவபிள்ளைகளின் ஜெபமும், ஆலோசனைகளும் நம் வெற்றிக்கு மிகவும் அவசியம் (நீதி. 24:6; 1 கொரி. 12:26). பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் உள்ள பலத்தையும், வெற்றியையும் குறித்து சாலமோன் இவ்வாறு எழுதுகிறார், “ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்... ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம் (பிரசங்கி 4:9, 12). தானியேலும் அவனுடைய நண்பர்களும் நல்ல நட்புடனும், ஐக்கியத்துடனும் இருந்தபடியால், தங்களுக்கு விரோதமான அந்நிய தேசத்தில் விக்கிரக ஆராதனைக்கு இடங்கொடாமல் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நின்றார்கள். மேலும் தானியேலின் காரியம் ஜெயமாக இருந்தது என்று வேதம் கூறுகிறது (தானி. 2:17,18; 3:16-18; 6:28). அல்லேலூயா!

# குடும்பங்கள் காக்கப்பட ஐந்து ஆலோசனைகள்

திருமணம் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டது (ஆதி. 2:18). திருமணத்தின் வாயிலாக குடும்பங்கள் உருவாகின்றன (ஆதி. 2:24). கர்த்தர் இந்த பிரத்தியேக பந்தத்தை நேசிக்கிறார். அதை ஆசீர்வதித்து பாதுகாக்க விழைகிறார். கர்த்தர் விரும்புகிறபடியே நம் குடும்பங்கள் பாதுகாக்கப்பட உதவும் ஐந்து ஆலோசனைகள் இங்கே காண்போம்.

**தேவனுக்கு முதலிடம் கொடுங்கள் :**

தேவனுக்கு முதலிடம் தருதல் என்பது அவரில் அன்புகூர்ந்து அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடப்பதாகும். (1 யோவான் 5:3). மற்ற யாரையும் விட அவரை கனம்பண்ணி, பிரியப்படுத்தி வாழ்வதாகும். ஏதேன் தோட்டத்தில் “இக்கனியை புசிக்க வேண்டாம்” என்பது கட்டளை (ஆதி. 2:17). ஆதாமோ தன் மனைவியாகிய ஏவாளின் சொல்லுக்கு இணங்கி அக்கனியை புசித்தான். இவ்விதமாய் இருவரும் தேவனுக்கு கீழ்படிந்து அவரை கனம்பண்ண தவறினதால், அவருக்கு முன்பாக நிற்கும் தகுதியை இழந்தனர். பூமிக்கு சாபம் வர காரணமாயினர் (ஆதி. 3:1-19). குடும்பத்தை அலட்சியப்படுத்தவும், கடினமாய் நடத்தவும் வேதம் நமக்கு கற்பிக்கவில்லை. மாறாக தேவனுக்குரிய இடத்தை தேவனுக்கும், குடும்பத்திற்குரிய இடத்தை குடும்பத்திற்கும் தருவதே முறையானது என்று கற்பிக்கிறது. எனவே கர்த்தருக்கு கீழ்படிந்து முதலாவதாக அவரை கனம்பண்ணி, நம் குடும்பத்தையும் நேசித்து, பராமரித்து, தேசத்திற்கு ஆசீர்வாதமாய் இருப்போமாக.

**உடன்படிக்கையில் உண்மையாக இருங்கள் :**

யோசேப்பு போத்திபாரின் வீட்டில் பணி செய்த போது, போத்திபாரின் மனைவி தன் மனதில் யோசேப்பை இச்சித்தாள். வாழ்விலோ போத்திபாரை கணவனாகக் கொண்டிருந்தாள் (ஆதி. 39:7-12). இது எத்தகைய அவல நிலை! தம்முடைய மக்கள் திருமண வாழ்வில் நேர்மையையும், பரிசுத்தத்தையும் கடைபிடிக்க வேண்டுமென கர்த்தர் நியமித்திருக்கிறார். வேதாகமத்தில் விவாக உடன்படிக்கையின் மேன்மையும், அதில் காணப்பட வேண்டிய நேர்மையையும் குறித்து எபிரெயர் 13:4லும், மல்கியா 2:14-15லும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இயேசுவும் கூட கண்களின் இச்சையைக் குறித்து மத்தேயு 5:28ல் எச்சரிக்கிறார். ஆகவே, யோபுவை போல உங்கள் நினைவுகளையும், கண்களையும் காத்துக்கொள்ளுங்கள் (யோபு 31:1).

**குறைகளை பெரிதுபடுத்தாதீர்கள் :**

ஈசாக்கு மலடியாய் இருந்த தன் மனைவிக்காக கர்த்தரை நோக்கி ஜெபித்தார் (ஆதி. 25:21). ஆபிரகாம் மற்றும் யாக்கோபைப் போல வேறு மனைவிகளைத் தேடவில்லை. மலடி என்று தன் மனைவியைக் குறித்து கசந்து கொள்ளவுமில்லை, சலிப்படையவுமில்லை. மாறாக, ஈசாக்கு தன் மனைவியை நேசித்தும், அவளுக்காக ஜெபித்தும், அவளுடன் விளையாடிக் கொண்டும், இறுதிவரை அவளுக்காக மட்டுமே வாழ்ந்து கொண்டிருந்தார். காரணமென்ன? அன்பு! அன்பு! தூய்மையான அன்பு மட்டுமே! இன்று வெறும் சரீர இச்சைகளை மட்டுமே அன்பு என்று உலகம் சித்தரிக்கிறது. ஆனால் நமது பரிசுத்த வேதம் இவ்வாறு சொல்கிறது. “அன்பு சகலத்தையும் தாங்கும்; சகலத்தையும் சகிக்கும்; சினமடையாது; தீங்கு நினையாது” (1 கொரி. 13:4-7). இத்தகைய தெய்வீக அன்பு நம்மிடம் பெருகுமானால் இன்று கிறிஸ்தவ குடும்பங்களில் பெருகிவரும் விவாகரத்துக்கள் நிச்சயமாக மறைந்தே போகும்.

**வெளியரங்கமாயிருங்கள் :**

வெளியரங்கமாய் இருத்தல் என்பது உண்மை பேசுவதைக் குறிக்கிறது. குடும்ப வாழ்விலும், சபையிலும் உண்மையாய் இருப்பது மிக அவசியமாகும். அனனியா-சப்பீராள் என்னும் தம்பதியினரைப் பற்றி நாம் அப்போஸ்தலர் நடபடியிலே வாசிக்கிறோம் (அப். 5:1-10). இவர்கள் திருச்சபையிலே துணிகரமாய் பொய் உரைத்தனர். மரணத்தை தண்டனையாய் பெற்றனர். பரிசுத்த வேதமும் கர்த்தர் வெறுத்து, அருவருக்கிற காரியங்களில் பொய்யுரைத்தலை பட்டியலிடுகிறது (நீதி. 6:16-19; நீதி. 12:22). கர்த்தர் தாமே பிறருடன் உண்மையை பேச நம்மை திட்டமாய் அறிவுறுத்துகிறார் (லேவி 19:11-12; சகரியா 8:16-17). எனவே கர்த்தருடைய இந்த வார்த்தைகளின்படி உண்மையை பேச்சிலும் நடக்கையிலும் கடைபிடிக்க ஜாக்கிரதையாய் இருப்போமாக.

**தேவனுக்கு ஊழியம் செய்யுங்கள் :**

அப்போஸ்தலருடைய நடபடிகள் 18ம் அதிகாரத்திலே நாம் ஆக்கில்லா-பிரிஸ்கில்லா என்ற தெய்வபயம் மிக்க தம்பதியினரைக் குறித்து அறிகிறோம் (அப். 18:2-3; 18, 26). இந்த தெய்வபக்தி நிறைந்த தம்பதியினர் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படியாய் ஏகமனமும், சிந்தையும் உடையவராய் இருந்தனர். பவுலுக்கு தங்கள் இல்லத்தை திறந்து கொடுத்து, ஊழியத்தில் அவருக்கு உறுதுணையாய் இருந்தனர். அவர்கள் அப்பொல்லோ என்னும் ஊழியரை ஏற்றுக்கொண்டு, இயேசுகிறிஸ்துவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்த சத்தியங்களை அவருக்கு தெரிவித்தனர். இவ்வாறாக தேவ இராஜ்ஜியம் கட்டப்பட தங்கள் வாழ்வை அர்ப்பணித்த அவர்களின் அர்ப்பணம் நம்மிடம் உண்டா? அன்புடன் இன்றே அர்ப்பணிப்போம். ஆண்டவர்க்கு ஊழியம் செய்திடுவோம்.




**தாய்மார்கள் தினம்**

## 2022 May 8, Sunday

**2022 மே 8, ஞாயிறு**

தாய்மார்களுக்காக
சிறப்பு ஜெபங்கள், செய்தி உண்டு.
பங்குபெறுங்கள்!
ஆசீர்வாதம் பெறுங்கள்!

There will be special prayers and message
for the mothers on the Mother's Day Sunday Service
Come and Be Blessed!

---

## 2022 June 19, Sunday

**2022 ஜீன் 19, ஞாயிறு**

தகப்பன்மார்களுக்காக
சிறப்பு ஜெபங்கள், செய்தி உண்டு.
பங்குபெறுங்கள்!
ஆசீர்வாதம் பெறுங்கள்!

There will be special prayers and message
for the fathers on the Father's Day Sunday Service.
Come and Be Blessed!




**தகப்பன்மார்கள் தினம்**

# சபையில் எப்படி நடந்து கொள்வது?

1. **சபை ஒரு குடும்பம்** (எபேசி. 3:15; 4:6) : ஆகவே நாம் ஒருவரை ஒருவர் நம்புவதுடன், ஒருவரை ஒருவர் மதித்தும் (ஒத்துழைத்தும்) வாழ வேண்டும்.
2. **சபை ஒரு ஐக்கியம்** (அப். 2:42-45; 1 யோவான் 1:3) : ஆகவே நாம் நம்முடைய செல்வங்களையும், மற்ற ஆசீர்வாதங்களையும் மற்றவர்களோடு பகிர்ந்தும் மற்றவர்களின் பிரச்சனைகளிலும், துன்பங்களிலும் தாங்கவும் வேண்டும்.
3. **சபை ஒரு சரீரம்** (1 கொரி. 12:12, 17; எபேசி 4:16) : ஆகவே அவயவங்களாகிய நாம் சுயநலமில்லாமல் ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்வதுடன், அன்புடனும் இரக்கத்துடனும், பலவீனமானவர்களுக்கு உதவ வேண்டும்.
4. **சபை ஒரு கட்டிடம்** (எபேசி. 2:19-22; 1 கொரி. 3:9) : ஆகவே ஜீவனுள்ள கற்களாகிய நாம், தேவன் நம்மை வைத்துள்ள இடத்தில் தாழ்மையுடனும், மகிழ்ச்சியுடனும், யாரையும் வெறுக்காமலும், தற்பெருமை கொள்ளாமலும் இருக்க வேண்டும்.
5. **சபை ஒரு பள்ளி** (எபேசி. 3:18, 19; 4:11-14) : ஆகவே நாம் தேவனை அறியும் அறிவில் வளரவும், பூரண புருஷராகவும், பரிசுத்தவான்களின் கூடுகையைத் தவிர்த்தல் கூடாது.
6. **சபை ஒரு மந்தை** (1 பேதுரு 2:25; 5:2-5) : ஆகவே நாம் தன்னிச்சையாக செயல்படாமல், மற்றவர்களைச் சார்ந்தும், நாம் எல்லாக் காரியங்களிலும் ஒத்துழைப்பதுடன், நம் ஆத்தும மேய்ப்பரைப் பின் தொடரவேண்டும்.
7. **சபை ஒரு வீடு** (1 தீமோ 3:15 ; எபி 3:6) : ஆகவே அவ்வீட்டிலுள்ளோரை தேவன் ஆசீர்வதிக்கும்பொருட்டு கிறிஸ்துவை அறியும் அறிவாகிய சுகந்த வாசனையால் அதை நிரப்ப வேண்டும்.
8. **சபை ஒரு பண்ணை** (1 கொரி. 3:9; எபி.6:7-12) : ஆகவே நாம் அதிக கனிதரும் பொருட்டு பரிசுத்த ஆவியானவர் அதிகமதிகம் ஊற்றப்பட்ட அனுபவத்தைப் பெற வாஞ்சிக்க வேண்டும்.
9. **சபை ஒரு சேனை** (எபேசி. 6:12; 2 கொரி. 10:3-6): ஆகவே நாம் சத்துருவின் தாக்குதலுக்குக் கவனமாயிருந்து, சாத்தானுடைய கட்டுகளிலிருந்து மக்களை விடுவிக்க ஒற்றுமையுடனும், தைரியத்துடனும் வீர நடைபோட வேண்டும்.
10. **சபை ஒரு விளக்கு** (மத். 5:14-16; பிலிப் 2:14-16) : ஆகவே நாம் இவ்வுலகிற்கு முன் மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து, உலகின் ஒளியான இயேசுவுக்குத் தொடர்ந்து சாட்சி பகர்ந்து இருளை அகற்ற வேண்டும்.

*நன்றி : ஆசீர்வாதம்*

# VBS 2022

சிறுவர், சிறுமிகளுக்கான

**கோடைக்கால கொண்டாட்டம்**

**மே 16 திங்கள்** முதல்

**மே 21 சனி** வரை





# வளரும் சபை



"நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று இயேசு கூறினார். ஆதி திருச்சபை இக்கட்டளைக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து அதற்கு கீழ்ப்படிந்தார்கள். ஆதி திருச்சபை ஒரு வளரும் சபையாக இருந்தது. அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் தீவிரமாகவும் ஆத்தும தாக முடையவர்களாயும் இருந்தார்கள். ஆதி திருச்சபை மிகவும் வேகமாக வளர்ந்து சமுதாயத்தில் முழுமையான மாற்றத்தைக் கொண்டு வந்தது. அவர்களுடைய முன் மாதிரியை நாம் கடைப்பிடிக்கும் போது நாமும் நம் சமுதாயத்தில் அவ்வகையான மாற்றத்தைச் செய்ய முடியும்.

## 1. சபை எண்ணிக்கையில் வளருதல்

அப்போஸ்தலர் நடபடிக்கைகள் புத்தகத்தை நாம் வாசிக்கும் போது லூக்கா சபையின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும் போது எத்தனை முறை குறிப்பிடுகிறார் என்று அறியும்போது நாம் வியப்படைகிறோம். அப்போஸ்தலர் நடபடிக்கைகளில் கூறப்படும் வளர்ச்சியை நாம் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தேவனுடைய வார்த்தை வளர்தல் அல்லது பரவுதல் பற்றிக் கூறும் பகுதி மற்றும் சீடர்களின் எண்ணிக்கையின் வளர்ச்சியைப் பற்றிக் கூறும் பகுதி என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

**தேவ வசனம் விருத்தியடைதல் :**

கீழ்க்கண்ட வசனங்களை வாசியுங்கள் :

- **"தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று. ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்" (அப். 6:7).**
- **"தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று" (அப். 12:24).**
- **"கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று" (அப். 13:49).**
- **"இவ்வளவு பலமாய் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது" (அப். 19:20).**

**மனந்திரும்பியவர்கள் மற்றும் சீஷர்களின் எண்ணிக்கை அதிகரித்தது .**

- **"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப். 2:41).**
- **"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" (அப். 21: 47).**
- **"திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்" (அப். 5:14).**
- **"அந்நாட்களில் சீஷர்கள் பெருகினபோது...." (அப். 6:1).**
- **"அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று.... பெருகின" (அப். 9:31).**
- **"...அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்" (அப். 11:24).**
- **"அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின" (அப். 16:5).**

தேவன் சபை வளரவேண்டுமென்று விரும்புகிறார். மக்களை சென்றடைவதை சபை ஒருபோதும் நிறுத்தக் கூடாது. கிறிஸ்துவை அறிந்தவர்கள் சபைக்குச் செல்வது, வேதாகமம் வாசிப்பதோடு திருப்தி அடைந்து விடக் கூடாது. ஏற்கனவே அதிகம் பேர் உள்ளார்களென்று காரணம் காட்டி நற்செய்தியை எடுத்துச் செல்லாமல் இருக்கக் கூடாது. நாம் கற்றறிந்த அனைத்தும் ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்காய் ஆதாயமாக்க நம்மைத் தீவிரப் படுத்த வேண்டும். ஏனெனில் நற்செய்தியை அறிவிப்பதே நம் முக்கிய பணி.

## 2. விசுவாசிகள் உற்சாகத்துடன் ஈடுபடுதல்

ஆதி திருச்சபை எண்ணிக்கையில் விருத்தியடைந்தது. அது காரணமில்லாமலில்லை. ஆதி திருச்சபையை வேகமாக வளரச் செய்தது எது என்று இப்போது பார்ப்போம்.

**ஒவ்வொரு கிறிஸ்தவனும் :** ஆதி திருச்சபையில் இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியும் சுவிசேஷப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். அப்போஸ்தலர்கள் மட்டுமின்றி பல இடங்களில் பரவியிருந்த ஒவ்வொருவரும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர் (அப். 8:1,4). நற்செய்திப்பணி அனைவருக்கும் தான் என்பதை அவர்கள் அறிந்து இருந்தார்கள். (மத். 28:18-20). நற்செய்தியை அறிவிக்கும் பணியை தேவ பிள்ளைகள் ஒவ்வொருவரின் பொறுப்பிலும் தேவன் கொடுத்திருந்தார். நற்செய்தியை அறிவிப்பதற்கு எந்த ஒரு கிறிஸ்தவனும் விதிவிலக்கல்ல. சுவிசேஷத்தை அறிவிப்பது போதகர்களுக்கும், முழு நேர ஊழியர்களுக்கு மட்டுமானதல்ல. அது மறுபடி பிறந்த ஒவ்வொரு தேவ பிள்ளைகளின் பொறுப்பாகும்.

**ஒவ்வொரு நாளும் :** இரட்சிக்கப்பட்டவர்கள் ‘அனுதினமும்’ சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். (அப். 2:47). ஆதி திருச்சபை ஒவ்வொரு நாளும் ஊழியம் செய்யும் சபையாயிருந்தது (அப். 5:42). அதன் விளைவாக சபை, எண்ணிக்கையில் அனுதினமும் வளர்ந்தது. நாம் காலை ஜெபத்தோடு “தேவனே, எனக்கு இன்று ஒரு ஆத்துமாவைத் தாரும்” என்ற வாக்கியத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பின் ஒரு சந்தர்ப்பத்தை நாம் எதிர்பார்த்திருக்க வேண்டும். அனுதினமும் சாட்சி பகர்தல் சபையையும், தேவ இராஜ்ஜியத்தையும் அனுதினமும் வளரச் செய்கிறது.

**எல்லா இடங்களிலும் :** “அவர்கள் புறப்பட்டுப் போய் ‘எங்கும்’ பிரசங்கம் பண்ணினார்கள்” (மாற்கு 16:20) என்று வேதாகமம் கூறுகிறது (அப். 8:4). பவுல் ஒவ்வொரு நாளும் ஜெபக் கூடங்களில் மட்டுமின்றி கடைத் தெருவிலும் நற்செய்தியைப் பிரசங்கித்தார். அவர்கள் வாழ்ந்த உலகை நற்செய்தியால் ஊடுருவி, நிரப்பினார்கள். பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் போய் ஏழைகளையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும் கூட்டி வர நாம் கட்டளையிடப்பட்டுள்ளோம் (லூக்கா 14:21-23). பேருந்துகளிலும், தொடர் வண்டிகளிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், மருத்துவமனைகளிலும், அலுவலகங்களிலும் அனைத்து இடங்களிலும் போய் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும்.

**எல்லா வழிகளிலும் :** “எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்” என்று பவுல் கூறினார் (1 கொரி. 9:22). ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் கொண்டுவர எல்லா வழிமுறைகளையும் நாம் கையாள வேண்டும். இரட்சிக்கப்படாதவர்களுக்காக அனுதினமும் ஜெபிக்க வேண்டும். அக்கம்பக்க த்தில் ஜெப நடை செய்யலாம். கைப்பிரதிகளை (Tracts) கொடுக்கலாம். நட்புடனும், புன்னகையுடனும், சபைக்கும், நற்செய்திக் கூட்டங்களுக்கும் அழைக்கலாம். நோயுற்றோரை சந்தித்து அவர்களுக்காக ஜெபிக்கலாம். யாருக்கும் எங்கேயும் உதவலாம். நல்ல சமாரியர்களாக இருக்க வேண்டும் (லூக்கா 10:30-37). பணம் செலவழிக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும் (2 கொரி. 12:15). எப்படியாவது நாம் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும். இப்பூமியில் உங்கள் சந்தோஷமும் பரலோகத்தில் உங்களுக்கு வெகுமதியும் மிகுதியாய் இருக்கும்.

இயேசுவுக்காய் எழும்பிப் பிரகாசிப்போம்!

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!!

## நல்ல சபை அங்கத்தினர்களுக்குரிய குணாதிசயங்கள் :

1. சபை அங்கத்தினர்கள் இரட்சிக்கப்பட்டும், இரட்சிப்பின் நிச்சயம் பெற்றவர்களாயும் இருக்க வேண்டும் (யோவான் 1:11 -13/எபே. 2:8,9/1 யோவான் 5:13).
2. சபை அங்கத்தினர்கள் வேதாகமத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும் (மத். 28:18-21).
3. தவறாமல் சபைக்குச் செல்கிறவர்களாய் இருக்க வேண்டும். (அப். 14:27/எபி. 10:25).
4. ஒருமனப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் (அப். 2:46/4:32).
5. வசனத்தின்படி நடப்பவர்களாய் இருக்க வேண்டும் (2 கொரி. 6:14-18).
6. சத்திய வசனத்தை வாசிப்பவர்களாகவும், உபதேசத்தில் நிலைத்திருப்பவர்களாகவும் இருக்க வேண்டும். (2 தீமோ. 2:15).
7. ஒருவருக்கொருவர் ஜெபிக்கிறவர்களாயும், ஆத்துமாக்களுக்காகவும், ஒற்றுமைக்காகவும், போதகர்களுக்காகவும், சபை மூப்பர்களுக்காகவும், ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்காகவும் ஜெபிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும் (லூக்கா 18:1).
8. கொடுப்பவர்களாய் இருக்க வேண்டும் (மல்கி. 3:7-11).
9. தேவ ஆவியால் நிரம்பியவர்களாகவும், ஆத்தும ஆதாயம் செய்பவர்களாகவும் இருக்க வேண்டும் (அப். 1:8/எபேசி. 5:18/கலாத். 5:22-25).
10. சபை ஊழியங்களில் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் (1 கொரி 15:58).

## CHARACTERISTICS OF AN IDEAL CHURCH MEMBER

1. Church members should be saved & sure of it (John 1:11-13; Eph. 2:8, 9; 1 John 5:13).
2. Church members should be baptized biblically (Matthew 28:18-21).
3. Church members should be attend their church faithfully (Acts 14:27; Heb. 10-25).
4. Church members should be cooperative (Acts 2:46; 4:32).
5. Church members should be consistent (2 Corinthians 6:14-18).
6. Church members should be students of the Bible (2 Timothy 2:15).
7. Church members should be pray for one another (Luke 18:1). Praying for souls, unity, pastor, elders, Sunday school teachers, etc.
8. Church members should be givers (Malachi 3:7-11).
9. Church members should be spirit filled soul winners (Acts 1:8; Eph.5:18; Gal. 5:22-25).
10. Church members should be committed to the ministries of the church (1 Corinthians 15:58).

# VICTORIOUS CHRISTIAN LIFE

***Rev. Dr. Jerry Daniel***

***Thanks be to God who always leads us in triumph in Christ.***
***Thanks be to God who gives us the victory through our Lord Jesus Christ.***
***(2 Cor. 2:14; 1 Cor. 15:57)***

The Lord has promised us a victorious life. We are not born or born again for defeat. God wants us to experience the peaceful life (Isaiah 30: 15), the overflowing life (John 7: 37-39), the abundant life (John 10: 10), the joyful life (John 15: 11), the liberated life (Romans 6: 7) and the triumphant life (2 Corinthians 2: 14). The victorious life the Lord gives us is a life of victory over SIN, SELF and SATAN. We have to receive this victory through our Lord Jesus Christ. Though this victory is a free gift given us, we need to know the following secrets to walk continuously in victory.

**1. Victory through SUPPLICATION**

Prayer is a powerful weapon in spiritual warfare. When we pray we acknowledge our dependence on God. We admit that we are helpless without him. The Bible says that no man can prevail by his/her own strength (1 Samuel 2:9). Victory comes from the Lord (Pro. 21:31; 1 Chro. 29:11; Psalm 75:6). When we seek God earnestly and commit our cause into His hands, He will perform mighty miracles on our behalf and give us victory. King Asa and King Jehoshaphat understood that and their prayers brought great victories in the battle (2 Chro. 14:11-15; 20: 1-26).

As you read the book of Acts, there is the shout of victory on every page. The early Christians learned how to pray and they saturated their lives with prayer and God gave them continuous victory. Many today are failing in our battle against the world, the flesh, and the devil. The reason for our failure can be primarily and fundamentally traced to lack of prayer. Prayer always brings us victory. The devil trembles when he sees the weakest Christian on his knees. Jesus said, "Watch and pray, lest you enter into temptation" (Mark 14:38). Paul wrote, "Pray in the Spirit on all occasions with all kinds of prayers and requests. With this in mind, be alert and always keep on praying for all the saints" (Ephesians 6:18).

**2. Victory through SCRIPTURES**

Apostle John wrote, 'Young men, because you are strong, and the word of God lives in you, and you have overcome the evil one (1 John 2:14). God has given us the Bible which is a powerful tool to overcome sin and Satan. The Word of God is the sword. It is the only offensive

weapon in the Christian armour to attack the enemy (Eph. 6:17). We must read, meditate and saturate ourselves with the word of God. The enemy will unconditionally surrender to God's word.

The devil will not be afraid if you keep the Bible in your hand or under your head. The Word must be in your heart (Deut. 6:6; 11:18; Psa. 37:31; 40:8). Jesus had the word in his heart and he defeated Satan in the wilderness by saying 'It is written' (Matt. 4: 4, 7, 10). The Word in the heart guarantees decisive victory over sin also (Psalm 119:11). God instructed Joshua to meditate and obey the Book of the Law in order to be successful (Joshua 1:8). If you will read God's Word, memorize God's Word, obey God's Word and share God's Word then you will be equipped to walk in victory all the time.

**3. Victory through SINGING**

Praise brings victory in our lives. God inhabits the praises of his people (Ps. 22:3). You cannot praise God and not see wonders in your life. Those who continually praise God will see uncommon victories in their lives. King Jehoshaphat knew this secret and applied this weapon of praise and got a great victory when three mightier nations came against him to fight with.  He appointed men to sing to the Lord and to praise him saying: “Give thanks to the Lord, for his love endures for ever.'

As they began to praise the Lord, the Lord caused the enemies to fight each other and destroy themselves (2 Chronicles 20:19-26). This is the same victory the Lord wants to give to us when we come before Him in praise and worship. Praising God also gives us victory over discouragement and depression (Isaiah 61:3) in this journey of life.

**4. Victory through SPIRIT OF GOD**

The Bible declares, “When the enemy comes like a flood, the Spirit of the Lord will lift up a banner against him (Isaiah 59:19). Spiritual warfare cannot be fought with human or carnal weapons (2 Cor. 10:4). We must rely on the strength of the Holy Spirit to resist the attacks of the enemy. The Holy Spirit gives us “power from on high” (Luke 24:49) and delivers us from every bondage (Luke 4:18; 2 Cor. 3:17).

The “deeds of the flesh” are ugly and displeasing to God: “immorality, impurity, sensuality, idolatry, sorcery, enmities, strife, jealousy, outbursts of anger, disputes, dissensions, factions, envying, drunkenness, carousing, and things like these” (Galatians 5:19-21). If these are the qualities that characterize your life today, remember that

you are a child of God and you don't need to live that way! In contrast, the Spirit of the Lord offers to fill your life with "the fruit of the Spirit": love, joy, peace, patience, kindness, goodness, faithfulness, gentleness, self-control" (Galatians 5:22-23). We become more than conquerors through the spirit of God (Romans 8:37)!

**5. Victory through STEADFAST FAITH**

The Bible says, "For everyone born of God overcomes the world. This is the victory that has overcome the world, even our faith" (1 John 5:4). God gives us the victory through our faith in Christ. Our faith must be in God and his word and this faith will overcome the obstacles and challenges and bring us the victory. We must not allow doubt and unbelief to rob us of our victory through Christ. Little boy David won a great victory over Goliath because he had a tremendous faith in the big God (1 Samuel 17: 45-47).

Our faith in the promises of God will bring great miracles and victories in our life. God has promised that no weapon formed against us will prosper because this is the heritage of the servants of the Lord (Isaiah 54:17). Victory is our inheritance and birth right given to us by God as we serve Him. We must claim this inheritance of ours in every battle that we face. Paul writes "Above all, taking the shield of faith with which you will be able to quench all the fiery darts of the wicked one" (Ephesians 6:16).

**6. Victory through SAINTS' FELLOWSHIP**

Fellowship of saints is indispensable for victorious Christian living. Nothing is more dangerous in the Christian life than to separate oneself from other Christians. Many today have adopted the I-and-my-God policy and have been devoured by the roaring lion. The sheep that strays from the flock gets easily devoured by the wolf. The chick that strays from other chicks under the hen gets easily snatched away by the eagle. This speaks of safety in fellowship. Referring to the strength in the fellowship of saints, Solomon wrote, "Two are better than one...Though one may be overpowered by another, two can withstand him' (Eccl. 4:9, 12). Daniel and his friends were able to boldly say no to idolatry and denial of their faith because they mutually strengthened one another in the hostile land (Dan. 2:17, 18; 3: 16-18). Daniel 6:28 says that Daniel enjoyed success and victory throughout his life! Hallelujah!

# Five Counsels for Protecting our Families

Marriage was founded by God (Gen 2:18). Families emerge through marriage (Gen 2:24). God loves this special bond and wishes to bless and protect it. Let us see the five counsels that would help in protecting our families.

## Give the First Place to God

Giving the first place to God implies loving God and obeying His commands (1 John 5:3). It is to honour and please God more than anyone else. God commanded Adam, "Do not eat from the tree of Good and Evil" (Gen 2:17). Adam ate the forbidden fruit consenting to his wife Eve's word. Thus both Adam and Eve failed to obey and honour God. As a result they lost the privilege of standing before God and also brought curse upon the earth (Gen 3: 1-19). The Bible does not teach us to ignore the family. Rather it instructs us that we must give God the rightful place. God and his Word must be given priority in the family.

## Be Faithful In the Covenant

When Joseph was serving at Potiphar's house, Potiphar's wife lusted after Joseph in her heart though she had Potiphar as her husband in life (Gen 39:7-12). How disgusting! The Bible emphasizes the sanctity of marriage and the faithfulness of the marriage covenant in Hebrews 13:4 and Malachi 2:14, 15. Jesus also warns about the lust of the eyes in Matthew 5:28. Hence guard your thoughts and eyes as Job did (Job 31:1) in order to protect your marriage.

## Do Not Magnify Shortcomings

Isaac prayed to the Lord for his wife because she was barren (Gen 25:21). He did not seek for other wives as did Abraham and Jacob. He was neither bitter nor vexed about his wife's barrenness. Whereas Isaac loved her, prayed for her, cherished her and lived for and with her till the end of his days. What is the reason? Love! Love! Pure love alone! The love that the world depicts today is just fleshly lustful attraction. But the Holy Bible says, "love bears all things; endures all things; love is not irritable or resentful" (1 Cor. 13: 4-7). If this kind of divine love abounds in us, the increasing divorces in Christian families will vanish for good.

## Be Open / Honest

Being open denotes speaking the truth. It is essential that we need to be truthful in family life and in the church. We read about the couple named Ananias and Sapphira in the book of Acts (Acts 5:1-10). They shamelessly lied in the church and were punished with death. The Bible enlists 'lie' as one of the things which God hates and is an abomination to Him (Pro. 6: 16-19; 12:22). God Himself firmly instructs us to speak truth with one another (Lev. 19:11-12; Zech. 8:16-17). So let us be diligent to be truthful in our speech and behaviour.

## Serve The Lord Together:

We come to know about a God-fearing couple named Aquila and Priscilla in Acts Chapter 18 (Acts 18:2-3; 18, 26). This couple had such oneness of heart and mind to serve the Lord. They opened their house to Paul and ardently supported him in his ministry. They received Apollos in their home and told him all about Jesus' life, death and resurrection. Thus they dedicated their life for building up the Kingdom of God. Do we have such a dedication to serve Christ? Let us consecrate our lives to serve the Lord with love.

# GROWING CHURCH



Jesus said, 'Go into all world and preach the gospel to every creature' (Mark 16:15). The early church took this commission very seriously and obeyed it very sincerely. The early church was a growing church. They had an evangelistic and passions for souls. The early church grew rapidly and brought about a total change and transformation in the society. We can do the same in our community when we follow their example.

## 1. EXPONENTIAL INCREASE

When we read through the book of Acts we will be amazed to see the number of times Luke comments on the growth and increase of the church. The early church was a growing church. The language of growth in Acts can be grouped into two broad categories: The texts that speak of the word of God increasing or spreading and the texts that speak of the number of disciples increasing.

**The Word of God Increased**

Read the following verses.

- Acts 6:7 – And the word of God continued to increase, and the number of the disciples multiplied greatly in Jerusalem, and a great many of the priests became obedient to the faith.
- Acts 12:24 – But the word of God increased and multiplied.
- Acts 13:49 – And the word of the Lord was spreading throughout the whole region.
- Acts 19:20 – So the word of the Lord continued to increase and prevail mightily.

**The Number of Converts and Disciples Increased**

- Acts 2:41 – Those who received his word were baptized, and there were added that day about three thousand souls.
- Acts 2:47 – And the Lord added to their number day by day those who were being saved.
- Acts 5:14 – And more than ever believers were added to the Lord, multitudes of both men and women.
- Acts 6:1 – Now in these days when the disciples were increasing in number.
- Acts 9:31 – So the church throughout all Judea and Galilee and Samaria had peace and... multiplied.
- Acts 11:24 – And a great many people were added to the Lord.
- Acts 16:5 – So the churches were strengthened in the faith, and they increased in numbers daily.

The Lord wants the church to grow. The church should never stop reaching out. Those who know Christ can't be content just to attend their

churches, feast on the word, and excuse themselves from reaching others, thinking there are so many here already. Everything we learn should make us more effective in winning others to Christ because evangelism is our mission!

## 2. ENTHUSIASTIC INVOLVEMENT

The early church grew exponentially. But this did not happen without any reason. Let us now see what made the early church grow rapidly.

**Every Christian :** In the early church 'every' saved believer threw himself into the task of evangelism. Not only the apostles, everyone who was scattered preached the gospel (Acts 8:14). They understood that the Great Commission is for all people (Matt. 28:18-20). God has placed this responsibility of fulfilling the Great Commission upon every child of God. No Christian is free from the obligation of sharing the gospel. Every Christian should every non-Christian. It must be the total involvement of the church. Evangelism is not the duty of pastors and full-time workers alone. It is the responsibility every born-again child of God.

**Every Day :** Souls were added to the church 'daily' (Acts 2:47). The early church was daily ministering church. The Bible says, 'day after day, they never stopped teaching and proclaiming the good news that Jesus is Christ (Acts 5:42). The result was that the churches grew daily in numbers (Acts 16:5). Always add a sentence to your morning prayer, 'Lord, give me a soul today.' Then look out for an opportunity. Daily witnessing by individuals leads to the daily growth of the church and His kingdom.

**Every Where :** The Bible says, 'and they went out and preached "everywhere"' (Mark 16:20; Acts 8:4). Paul preached in the synagogue as well as in the market places day by day (Acts 17:17). They had infiltrated, penetrated, and saturated their world with the message of Christ. We are commanded to go into the streets, lanes, highways and hedges to the poor, maimed, lame and the blind and compel them to come in (Luke 14:21-23). Win souls in the bus, in the train, schools, colleges, hospitals, offices – anywhere and everywhere!

**Every Way :** Paul said that he became all things to all men that he might by all possible means save a few (I Cor. 9:22). Adopt as many methods as possible to bring souls to Christ. Regularly pray for the unsaved. Go for the prayer walk in your neighbourhood. Start distributing good tracts. Always extend a broad smile and a warm hand-shake. Gather the neighbourhood children in your house and teach them songs and bible stories. Invite friends to the church and gospel meetings. Visit the sick and pray for them. Help anyone anywhere. Be a Good Samaritan (Luke 10:30-37). Be ready to spend some money (2 Cor. 12:15). Somehow win some souls. Win the lost at any cost. YOUR JOY ON EARTH AND YOUR REWARDS IN HEAVEN WILL BE GREAT!

**Let us GROW AND GLOW for Jesus! God Bless You!**

# How to Behave in the Church?

- **The Church is a FAMILY (Eph. 3:15; 4:6).**
  Therefore we must live with mutual trust, respect and cooperation.
- **The Church is a FELLOWSHIP (Acts 2:42-45; 1 Jn. 1:3).**
  Therefore we must share with others the privileges and profits, and support one another in crises and sorrows.
- **The Church is a BODY (1 Cor. 12:12,27; Eph. 4:16).**
  Therefore we must unselfishly care for one another and help the weak with kindness and loving concern.
- **The Church is a BUILDING (Eph. 2:19-22; 1 Cor. 3:9).**
  Therefore we must stay happy and humble in the position in which God has placed us, without boasting of ourselves or despising anyone.
- **The Church is a SCHOOL (Eph. 3:18,19; 4:11-14).**
  Therefore we must not neglect the regular gathering of the saints for edification and education.
- **The Church is a FLOCK (1 Pet. 2:25; 5:2-5).**
  Therefore we must not be independent but interdependent and cooperation in whatever we do, following the Shepherd of our souls.
- **The Church is a HOUSE (1 Tim. 3:15; Heb. 3:6).**
  Therefore we must fill it with the fragrance of the knowledge of Christ to bless the residents with relaxation and refreshing.
- **The Church is a FIELD (1 Cor. 3:9; Heb. 6:7-12).**
  Therefore we must ask for and experience more and more of the Spirit's outpouring, and in response give much fruit.
- **The Church is an ARMY (Eph. 6:12; 2 Cor. 10:3-6).**
  Therefore we must be watchful always against the attacks of the enemy and march boldly and unitedly to free people from the devil's captivity.
- **The Church is a LAMP (Mt 5:14-16; Phil. 2:14-16).**
  Therefore we must live an exemplary life before the world and dispel darkness by consistently testifying about Jesus, the Light of the World.

Courtesy : Blessings

**பெரிய வெள்ளி ஆராதனை**
**GOOD FRIDAY SERVICE**
**ஏப்ரல் 15**

**உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனை**
**RESURRECTION SUNDAY SERVICE**
**ஏப்ரல் 17**

I will make a helper suitable for him. Gen 2:18

# AGAPE CHRISTIAN MATRIMONY

*Helping you to find your life partner*

*Venue :* **CITY REVIVAL AG CHURCH**

**Monday - Friday at 3.30 p.m to 6.30 p.m**
**Thursday at 10.30 a.m to 1.00 p.m**

**Contact : 98438 51115**



# ஆண்கள் ஐக்கியம்
# Men's Fellowship

**ஒவ்வொரு மாதமும் 3-வது திங்கட்கிழமை மாலை 6.30 மணி**

ஆண்கள் அனைவரும் பங்குபெறுங்கள்.

# பெண்கள் எழுப்புதல் ஜெபம்
# LADIES REVIVAL PRAYER

வியாழன் தோறும்
காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை



# வாலிபர் ஐக்கிய கூடுகை
# Youth Fellowship



*முதல் மற்றும் மூன்றாம் ஞாயிறு*
*மாலை 4.30 மணி*

வாலிப சகாதர, சகோதரிகள் அனைவரும் பங்குபெறுங்கள்.



**I.Joseph Samuel**
MCA., M.Div.,



**S.Santhosh Yobu**
B.Sc., B.Th.,

*நமது சபையில்*
*இணைந்திருக்கும்*
*புதிய உதவி போதகர்களை*
*வாழ்த்துகிறோம்.*

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st & 3rd Sunday-5.00 pm | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Men's Fellowship | 3rd Monday -<br>மூன்றாம் திங்கள்<br>7.00 pm - 8.30 pm | ஆண்கள் ஐக்கியம் |
| Youth Fellowship | 1st & 3rd Sunday<br>முதல் மற்றும்<br>மூன்றாம் ஞாயிறு<br>5.00 pm - 6.30 pm | வாலிபர் கூடுகை |
| Prayer Cells | Wed/Thu -<br>புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | 1st Friday -<br>முதல் வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | 4th Friday -<br>நான்காம் வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

## Your Offerings and Donations Can Be Sent to

A/c Name : City Revival AG Church
A/c Number : 35354599169
Bank Name : STATE BANK OF INDIA
IFSC Code : SBIN0000930

A/c Name : City Revival AG Church
A/c Number : 1196172000007824
Bank Name : KARUR VYSYA BANK
IFSC Code : KVBL0001196

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

# PRAISE & WORSHIP SERVICES

**EVERY SUNDAY**

Tamil Service - 7.00 a.m, 11.00 a.m
English Service - 9.00 a.m
Evening Service - 6.30 p.m

**ஞாயிறு தோறும்**

தமிழ் ஆராதனை 7.00 மணி, 11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

Anointed and Lively Worship, Soul-stirring Music
& Practical, Life-changing Messages

*Come with your friends & family &*
*Receive the blessings of God*



Sunday School is conducted for
kids below 14 years





**Rev. Dr. JERRY DANIEL**
Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org